# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 13. மதுபானம் மற்றும் புகையிலை விற்பனை செய்யப்படும் இடங்கள்

புகைத்தல்:

புகைபிடிப்பவர்களே கொவிட் - 19 தொற்றுக்கு அதிகம் இலக்காகுபவர்களாக உள்ளனர். ஏனெனில் புகை பிடிக்கும் செயற்பாட்டின்போது விரல்கள் (அத்துடன் விரலில் இருந்த கிருமிகள் ஒட்டுவதால் மாசடைந்த சுருட்டு/சிகரெட்) உதட்டுடன் தொடுகையுறுவதால் நச்சுயிரியானது (வைரசானது) கையிலிருந்து வாயினுள் கடத்தப்படுவதற்கான வாய்ப்பினை அதிகரிக்கின்றது. புகைபிடிப்பவர்கள் ஏற்கனவே சுவாச நோய்களைக் கொண்டவர்களாகவோ அல்லது குறைந்தளவு சுவாசிக்கும் திறன் உடையவர்களாகவோ இருக்கக்கூடும் என்பதால் அவர்கள் இந்நோயின் பாரதூரமான விளைவுகளுக்கு ஆளாகும் சாத்தியங்கள் அதிகம். பிராணவாயுவின் தேவையினை அதிகரிக்கும் நோய்நிலைகள் அதாவது உடலானது பிராணவாயுவை சரியாக உள்ளெடுக்கும் திறனைக் குறைக்கும் சந்தர்ப்பங்கள் நோயாளியை சளிக்காய்ச்சல் (நியூமோனியா) போன்ற பாரதூரமான நுரையீரல் பாதிப்புகளுக்கு இட்டுச் செல்லும் அபாயத்தினை அதிகரிக்கின்றன.

மதுபானம்:

மதுபானமானது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியினைக் குறைத்து மக்களை எளிதாக கோவிட் தொற்றுக்கு ஆளாக்குகின்றது. மேலும் மதுபானமானது வீதி விபத்துக்கள், வீட்டு வன்முறைகள் மற்றும் பிற வன்முறையான நடத்தைக் கோலங்களை அதிகரிக்கின்றது. இதனால் பெறுமதி வாய்ந்த மருத்துவ வளங்கள் இவ்வாறான அனாவசியமான நடவடிக்கைகளால் பாதிப்பிற்கு உள்ளாவோரை பராமரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதனால், உலகலளாவிய நோய்த் தொற்று நிலமைகளின்போது அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு அது கிடைக்காத அவல நிலையினை ஏற்படுத்தும்.

மதுபாவனை மற்றும் புகைத்தல் ஆகியவை பொதுவாகவே கண்ணாடிக் குவளைகள், உணவு உண்ணும் பாத்திரங்கள் மற்றும் வாயால் ஊதும் வாத்தியங்களை பகிர்ந்து பாவிக்கும் செயற்பாடுகளையும் உள்ளடக்கியிருப்பதால் இவை கோவிட்-19 இன் சமுதாய மற்றும் சமூகப் பரவலிற்கு வழிவகுக்கும். கோவிட் தொற்று ஏற்பட்டுள்ள காலப்பகுதியிலும் தொற்று இல்லாத காலப்பகுதிகளிலும் வேளைகளிலும் மதுபான நிலையங்கள், கள் விற்பனை நிலையங்கள் (தவறணைகள்), மது அருந்தும் பொது விடுதிகள், இரவுநேரக் களியாட்ட விடுதிகள், சூதாட்ட விடுதிகள், பந்தய நிலையங்கள் போன்றவை அரசாங்கத்தின் விதிமுறைகளுக்கும் நெறிமுறைகளுக்கும் இணங்கச் செயற்பட வேண்டும்.

**பிரத்தியேக தகவல்கள்/ வழிகாட்டடல்கள்**
**இயக்குனர் / உரிமையாளர் / ஊழியர்கள்**

- கோவிட் தொற்று நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்படும் வரையில் மதுபான மற்றும் புகைத்தல் விற்பனைகள் நாடளாவிய ரீதியில் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும்.
- சட்டவிரோத மதுபானம் மற்றும் புகையிலை ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் பொலிசாரினால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டியதுடன் அவற்றிற்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
- மதுபானம் மற்றும் புகைத்தல் பாவனையை ஊக்குவிக்கும் வகையிலமைந்த திரைப்படங்கள், பாடல் காட்சிகள் மற்றும் தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியன ஊடகங்களில் ஒளிபரப்பு செய்யப்படலாகாது.
- மதுபானம் மற்றும் புகையிலை விற்பனையைச் சமூக ஊடகங்களின் வாயிலாகவும் நிகழ்நிலைத் தளங்களின் ஊடாகவும் (online platforms) ஊக்குவிக்கும் நபர்களும் நிறுவனங்களும் விற்பனை நிலையங்களும் புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுதல் வேண்டும்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன

என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாகத்தின் உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**வாடிக்கையாளர்**

- மதுபானம் மற்றும் புகைத்தல் ஆகிய இரண்டையும் தவிர்ப்பதன் மூலம் உங்களது சொந்த நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைக்காமலும், மற்றவர்களுடைய ஆரோக்கியத்தை ஆபத்திற்கு உள்ளாக்காமலும் இருங்கள்.
- சமூக ஒன்றுகூடல்களின்போது புகைத்தல் மற்றும் மது அருந்துவது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

**அறிவுறுத்தும் முறைகள்**

வாடிக்கையாளர்களுக்கு அவர்களது ஆரோக்கியமற்ற நடத்தைகளை நினைவூட்டக்கூடும் என்பதால் உணவகங்கள், மது அருந்தும் பொது விடுதிகள், வீட்டுப் பொருள் வாணிபங்கள், மற்றும் பல்பொருள் அங்காடிகள் ஆகியன மதுபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளைக் காட்சிப்படுத்தாது தவிர்க்க வேண்டும்.

**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

28.06.2020

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.